தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 20, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 செப்டம்பர் 5, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு."

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிப்பதால் பீடித் தொழிலாளர்களுக்கு வேலை பாதிப்பு

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். பொது இடங்களிலே புகை பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பீடித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளில் பாதிப்பு ஏற்படுகிறது. இதைப் பொறுத்த அளவிலே விவாதிப்பதற்கு நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதை இன்று எடுத்துக்கொள்ள வேண்டும்.*

[2001 செப்டம்பர் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன், இதை ஏற்கெனவே என் அறையில் சொல்லியிருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்களும் பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள்.

(ஆ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

***திரு. துரைமுருகன்:** Hon. Speaker Sir, Point of order. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியப் பிரச்சினை குறித்து தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். தங்களுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கிற இந்த மாமன்றத்தில் பேரவை நடவடிக்கைகளைப் படம் எடுக்கின்ற செய்தித் துறையைச் சார்ந்தவர்கள் சரியாக எடுக்கவில்லை, பாரபட்சமாகக் காட்டுகிறார்கள், எதிர்க் கட்சிகளை இருட்டடிப்புச் செய்கிறார்கள், ஆளும் கட்சிக்கு அதிக முக்கியத்துவத்தைத் தருகிறார்கள், எனவே, இந்தக் குறையைப் போக்குவதற்காக, நீங்கள் அவர்களுக்குத் தருவதோடு, அரசுக்குச் சொந்தமாக இருக்கிற தூர்தர்ஷனுக்கும் அத்தகைய வாய்ப்பைத் தருவீர்களேயானால், மத்திய அரசு, மாநில அரசு என இரு அரசு நிறுவனங்களும் படம் எடுக்கிறபோது (குறுக்கீடு) இத்தகைய நிலைமை ஏற்படாது என்று தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் ஏற்கெனவே ஒரு நாள் கொண்டு வந்தேன். அதுகுறித்து, எழுதிக் கொடுங்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று தாங்கள் தெரிவித்தீர்கள். நானும் எழுதிக் கொடுத்தேன். நீங்கள் அவர்களுக்குத் தக்க அறிவுரைகளை வழங்கியிருப்பீர்கள் என்று, நானும் நித்தம் நித்தம் ஓடிப் போய் டி.வியிலே இந்தச் செய்தி வருகிறபோதெல்லாம் உட்கார்ந்து பார்த்தேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.